நீதித்துறை நடுவர் எண் 3 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

சி சி.எண்.56/2018

2019ம் ஆண்டு ஜனவரி திங்கள் 24ம் நாள் வியாழகிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.4 வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர்: சாமராஜ் வயது: 45

த/பெ.(அ)க.பெ: ராஜி தொழில்:கூலி

ஊர் : வேட்டப்பட்டு சமயம்: இந்து

வட்டம் : நாட்றம்பள்ளி சாதி:

மாவ்ட்டம் : வேலூர்

முதல் விசாரணை:-

நான் வேட்டப்பட்டு கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 என்னுடைய தாயார். எதிரிகள் இருவரும் என்னுடைய பெரியப்பா மகன்கள். எங்கள் குடும்பத்திற்கு பொதுவாக பாத்தியப்பட்ட பம்பு செட் மோட்டார் உள்ளது. அதில் ஆளுக்கொரு ஒரு நாள் என்ற முறையில் நீர் பாய்ச்சுவது வழக்கும் எதிரிகள் அடிக்கடி அவர்கள் பெயரில் உள்ளது என சொல்லி பீஸ் கேரியரை பிடுங்கி செல்வார்கள். பின்பு பஞ்சாயத்து செய்து பீஸ் கேரியரை மீண்டும் கொடுப்பதுமாக இருந்து வருந்தது.கடந்த 12.11.2017ம்தேதியன்று மேற்படி பம்பு செட்டின் பீஸ் கேரியரை எனது பெரியப்பா மாரி பிடுங்கி சென்றுவிட்டார். அந்த விபரத்தைஊர் கவுண்டர் பெருமாள் என்பவரிடமும், சித்தப்பா துரை என்பவரிடம் சொன்ன போது பீஸ் கேரியரை வாங்கி கொடுப்பதாக சொன்னார்கள். அவர்கள் சொல்லியும் பீஸ் கேரியரை கொடுக்கவில்லை. மாலை 03.00 ஆகிவிட்டதால் பயிர்கள் வாடிவிடும் என்பதால் வேறு ஒரு பீஸ் கேரியரை போட்டு நீர் பாய்ச்சுனோம். அப்போது பம்பு செட் அருகே எனது தாயாரிடம் எதிரி நாகராஜ், அவரின் அண்ணன் மனைவி காஞ்சனா, நாகராஜ் மனைவி ஆகியோர் அவர்களுடைய பம்பு செட் என பிரச்சனை செய்தார்கள். பிறகு அங்கிருந்து எங்களது வீட்டிற்கு வந்துவிட்டோம். மாலை 03.30 மணியளவில் 1ம் எதிரியும் கோவிந்தராஜியும் ஆகியோர்கள் தேவிடியா மகனே யாருடைய பம்பு செட் டா எங்க அப்பா பெயரில் இருக்கு உம் பெயரில் எங்கு இருக்கு சொல்லி, ராமசாமி என்பவர் என்னுடைய வலது கன்னத்தின் மீது கையால் அடித்துவிட்டார். எனது தாயாரையும் ராமசாமி எட்டி உதைத்து விட்டார். அவர் உதைத்தில் எனது தாயார் பக்கத்தில் உள்ள கல் மீது விழுந்ததில் இடுப்பு எலும்பு உடைந்துவிட்டது. காயமடைந்த எனது தாயாரை முதல் உதவி சிகிச்சைக்காக நாட்றம்பள்ளி மருத்துவமனைக்கு எடுத்துச்சென்றோம். அங்கு அவர்கள் திருப்பத்தூர் மருத்துவமனைக்கு

எடுத்துச்செல்லுமாறு சொன்னதால் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் கொண்டு வந்து சேர்த்தோம். மேற்படி பம்பு செட்டிற்காக பணம் கொடுத்துள்ளோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எ.த.கு.வி:-

நான் மேற்சொன்ன பம்புசெட் 3 எச்பி யா அல்லது 5 எச்பியா என்றால் எனக்கு நினைவில்லை. அந்த பம்பு செட்டில் எனது அப்பாவிற்கும் எனது பெரியப்பாவிற்கும் கூட்டாக பங்கு உள்ளது என்றால் சரிதான். 12.11.2017ம்தேதியன்று எனது பெரியப்பாவிற்கு தான் நீர் பாய்ச்சு பாத்தியம் என்றால் இல்லை எங்களுடைய தவணை. பெரியப்பா எப்போது பீஸ் கேரியரை பிடுங்கினார் என்றால் 12.11.2017ம்தேதி காலை 09.00 மணிக்கு பிடுங்கினார். பெருமாள், துரையிடம் இது சம்பந்தமாக எப்போது சொன்னோ என்றால் காலை 10.00 மணி இருக்கும். அது சம்மந்தமாக எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எப்போது நான் பீஸ் கேரியரை போட்டு தண்ணீர் பாய்ச்சினேன் என்றால் மாலை 03.30 மணி இருக்கும்.அப்போது எனது தந்தை மற்றும் தாயார் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். எனது வீட்டிற்கும் பம்பு செட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் 150 மீட்டர் தூரம் இருக்கும். ராமசாமி என்னை எந்த கன்னத்தில் அடித்தார் என்றால் வலது கன்னத்தில் அடித்தார். மேற்படி விபரத்தினை நான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எனது தாயாரை எந்த தேதியில் எத்தனை மணிக்கு கொண்டு போய் சேர்த்தேன் என்றால் 12.11.2017ம்தேதி மாலை 07.00 மணிக்கு கொண்டு வந்து சேர்த்தேன. எந்த மருத்துவமனையில் கொண்டு வந்து சேர்த்தேன் என்றால் நாட்றம்பள்ளி மருத்துவமனையில் சேர்ந்த பின்பு மேல் சிகிச்சைக்காக திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் கொண்டு வந்து சேர்த்தேன். பணம் நகை கொடுத்த விபரத்தை நான் போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொல்லவில்லை.போலீசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் மருத்துவமனையிலும், வீட்டின் அருகே வைத்தும் விசாரித்தார்கள். எந்த தேதியில் எந்த நேரத்தில் எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் திருப்பத்தூர் மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். பெரியப்பா பீஸ் கேரியரை பிடுங்கியதற்கு எதிரிகளின் மீது தவறுதலாக வழக்கு கொடுத்துள்ளேன் என்றால் எனது பெரியப்பா பிடுங்கி சென்றார் . அவர்களது பிள்ளைகள் அடித்தார்கள். வழக்கிற்காக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

ம.வி:-

இல்லை

நீதித்துறை நடுவர் எண் 3 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

<u>சி சி.எண்.56/2018</u>

2019ம் ஆண்டு ஜனவரி திங்கள் 24ம் நாள் வியாழகிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.5 வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர்: சௌந்தரி வயது:

த/பெ.(அ)க.பெ: சம்பத் தொழில்:விவசாயம்

ஊர் : வேட்டப்பட்டு சமயம்: இந்து

வட்டம் : நாட்றம்பள்ளி சாதி:

மாவ்ட்டம் : வேலூர்

முதல் விசாரணை:-

நான் வேட்டப்பட்டு கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன்.வழக்கின் எதிரிகளை தெரியும். அ.சா.1 எனது மாமியார். கடந்த 12.11.2017ம்தேதியன்று பொது பம்பு செட் பீஸ் கேரியரை எதிரிகள் இருவரும் காலை 06.00 மணிக்கு பிடுங்கி சென்றுவிட்டனர். பின்னர் ஊரில் பெரியவர்கள் பீஸ் கேரியரை போட்டு மோட்டார் ஓட்டும் படி சொல்லியதால் எனது மைத்துனர் சாம்ராஜ் பீஸ் கேரியரை போட்டு தண்ணீர் ஓட்டினார். அப்போது எதிரிகள் வந்து தகராறு செய்தார்கள். நாங்கள் வீட்டிற்கு வந்துவிட்டோம். நாங்கள் வீட்டிற்கு வந்த பிறகு எதிரிகளும் அவர்களுது மனைவிகளும் வீட்டின் அருகே வந்து தேவிடியா பசங்களே என அசிங்கமாக சொல்லி தகராறு செய்தார்கள். எதிரிகள் இருவரும் எனது மைத்துனரை அடித்தார்கள். அதை தடுக்க சென்ற எனது மாமியாரை எதிரிகள் இருவரும் எட்டி உதைத்தார். அவர்கள் உதைத்தில் எனது மாமியார் கீழே விழுந்த எனது மாமியாருக்கு இடுப்பில் அடிப்பட்டு விட்டது. அவரை திருப்பத்தூர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் வந்து சேர்த்தோம்.அதன் பிறகு மேல் சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனைக்கு நான் தான் கொண்டு போய் சேர்த்தேன்.

எ.த.கு.வி:-

எதிரிகள் மனைவகளுடன் வந்து எத்தனை மணிக்கு பிரச்சனை செய்தார்கள் எனறால் மாலை 06.00 மணி. மேற்படி விபரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். யார் சொல்லி பீஸ் கேரியரை ' எத்தனை மணிக்கு போட்டார் என்றால் பெருமாள், துரை சொல்லி மாலை 03.00 மணிக்கு போட்டார். யார் முதலில் எனது மாமியாரை உதைத்தார்கள் என்றால் ராமசாமி உதைத்தார். எத்தனை மணிக்கு மருத்துவமனைக்கு அழைத்து வந்து சேர்த்தோம் என்றால் இரவு 09.00 மணி. நாட்றம்பள்ளி மருத்துவமனை அழைத்துச்சென்ற போது திருப்பத்தூர் மருத்துவமனைக்கு அழைத்துச்செல்ல

சென்னார்கள். பெரிய மாமனார் பீஸ் கேரியரை பிடுஙகியதால் அவர்களது பிள்ளைகளின் மீது வழக்கு பொய்யாக போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. தனியார் மருத்துவமனைக்கு எந்த தேதியில் எத்தனை மணிக்கு அழைத்துச்சென்றோம் என்றால் 13.11.2017ம்தேதி காலை 11.00 மணிக்கு. போலீசார் எங்கு வைத்து விசாரித்தோம் என்றால் மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

ம.வி:-

இல்லை

நீதித்துறை நடுவர் எண் 3 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

சி சி.எண்.56/2018

2019ம் ஆண்டு ஜனவரி திங்கள் 24ம் நாள் வியாழகிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.6 வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர்: துரைசாமி வயது: 70

த/பெ.(அ)க.பெ: முனிசாமி தொழில்:-

ஊர் : வேட்டப்பட்டு சமயம்: இந்து

வட்டம் : நாட்றம்பள்ளி சாதி:

மாவ்ட்டம் : வேலூர்

முதல் விசாரணை:-

நான் வேட்டப்பட்டு கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். வழக்கின் எதிரிகளை தெரியும். அ.சா.1 ஐ தெரியும். வழக்கு சம்பவத்தை எனக்கு பற்றி தெரியாது.சம்பவம் நடந்து ஒரு வாரம் கழித்து ஊரில் மாரி குடும்பத்தாருக்கும் ராஜி குடும்பத்தாருக்கும் சண்டை நடந்தது என சொன்னார்கள். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

எ.த.கு.வி:-

இல்லை

நீதித்துறை நடுவர் எண் 3 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

சி சி.எண்.56/2018

2019ம் ஆண்டு ஜனவரி திங்கள் 24ம் நாள் வியாழகிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.7 வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர்: பெருமாள் வயது: 65

த/பெ.(அ)க.பெ: சின்னபையகவுண்டர் தொழில்:- விவசாயம்

ஊர் : வேட்டப்பட்டு சமயம்: இந்து

வட்டம் : நாட்றம்பள்ளி சாதி:

மாவ்ட்டம் : வேலூர்

முதல் விசாரணை:-

நான் வேட்டப்பட்டு கிராமத்தில் குடியிருந்து வருகிறேன்.விவசாயம் செய்து வருகிறேன். வழக்கின் எதிரிகளை தெரியும். அ.சா.1 ஐ தெரியும். வழக்கு சம்பவத்தை எனக்கு பற்றி தெரியாது. சம்பவம் நடந்த பிறகு ஊரில் நாகராஜிக்கும் சாம்ராஜிக்கும் பம்பு செட் சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டதாக சொன்னார்கள். நான் கேட்டு தெரிந்துக்கொள்ள வில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

எ.த.கு.வி:-

இல்லை